Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.342/2023 Date: 03.02.2025
Deposition of witness for prosecution: PW5 ( LW )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. அமீது இப்ராகீம் | Caste | |
| Father/ Husband Name | சவுகத்அலி | Calling | விவசாயம் |
| Village | கம்பம் | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 60/2025 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 01.02.2025 TIME **Am**

எதிரிகள் ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) அ.சா.1 எனது மாமா ஆவார். கடந்த 1936–ம் வருடம் கோளார் ராவுத்தர் அவர்களுக்கு சின்னமனூர் அருகே அருணாக்கல் எஸ்டேட் 491, 504/8 மொத்த விஸ்தீரணம் 05.41 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டு பின்னர் மேற்படி சொத்தை கடந்த 1954–ம் வருடம் கோளார் ராவுத்தரின் மகன் சின்னப்பராவுத்தர் அவரது மகள் சையதுராபியாவுக்கு தானமாக கொடுத்தார். 1956–ல் சையதுராபியாவின் கணவர் தாத்தா பெத்தார் மீரான் இறந்துவிட்டார். 1970–ம் ஆண்டு சையதுராபியா என்பவர் அவரது மகள் காலீசா பேகத்திற்கு தானமாக கொடுத்துவிட்டார். காலீசா பேகத்தின் மகன் காதர் பாட்சாவிற்கு (PW2) 2011–ம் ஆண்டு தானசெட்டில் மெண்டாக எழுதிக்கொடுத்துவிட்டார்.

2) சர்வே எண்.3409, 3410, 3411 உள்ள சொத்துக்களை பொறுத்து காதர் மைதீன், யூசுப், சபிகா ஆகியோர் 2011–ம் ஆண்டு போலியான பத்திரத்தை பதிந்துவிட்டார்கள். மேற்படி விபரத்தை எனது மாமா கமர்தீன் சொன்னார். 2019–ம் ஆண்டு மேற்படி சொத்தை பொறுத்து உள்ள வாரிசுகள் எனது மாமாவிற்கு எங்களது உரிமையை பொறுத்து பத்திரம் பதிந்து கொடுத்துவிட்டோம். போலிசார் என்னை 2020ம் வருடத்தில் எனது வீட்டில் வந்து இது தொடர்பாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

3) சின்னப்பராவுத்தர் அவரது மகள் சையதுராபியா என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவரது பெயர் வெறும் ராபியா என்றும் சையதுராபியா இல்லை என்றால் சரியல்ல. ஏர்பியா என்று எங்களது குடும்ப வாரிசு யாரும் இல்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், உண்மைக்கு மாறாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/திரு/A. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,

உத்தமபாளையம்